# தலைப்பு 437 - விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 மே 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம்

அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

இராஜாங்க அமைச்சின் 2020ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அமைச்சொன்று என்பதால் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என ஒப்பிடுவதற்கு கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 2020ஆம் ஆண்டுக்கான செலவின அறிக்கையிடல்**

2020 சனவரி 01ஆந் திகதி முதல் 2020 மார்ச் 05ஆந் திகதி வரையிலும் மற்றும் 2020 செப்தம்பர் 01ஆந் திகதி முதல் 2020 ஒக்தோபர் 20ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்காக முறையே 2019 ஒக்தோபர் 28ஆந் திகதி மற்றும் ஆகஸ்ட் 28ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால சட்டங்களின் மூலமும், 2020 மார்ச் 06ஆந் திகதி முதல் 2020 மே 31ஆந் திகதி வரையிலும் 2020 யூன் 01ஆந் திகதி முதல் 2020 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதிக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 150(3) ஆம் உறுப்புரையின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் வெளியிடப்பட்ட ஆணைச்சீட்டின் ஊடாகவும், 2020ஆம் ஆண்டின் போது அரச செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டுக்கான அமைச்சரவைக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் அரச செலவினம் 2019ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால கணக்கறிக்கையில் குறிப்பிடப்பட்ட செலவினத் தலைப்புகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதிமேதகு சனாதிபதியால் 2020 ஆகஸ்ட் 09ஆந் திகதி 2187/27 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அமைச்சரவையின் அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் பிரகாரம் 2020 ஒக்தோபர் 20ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2020இன் 6ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் 10 மற்றும் 12ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய 2020 சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலுமான செலவினங்கள் 2020 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட செலவினத் தலைப்புகளின் கீழான செலவின விடயங்களில் உள்ளடக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த பணிப்பொறுப்பு 2020 நவம்பர் மாதம் 30ஆந் திகதிய 6/2020 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்வதற்கு திறைசேரியினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

அதிமேதகு சனாதிபதியால் 2020 ஆகஸ்ட் 08ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் தலைப்பு 437 – விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆரம்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட அறிவுரைகளுக்கமைய 2020 சனவரி மாதம் முதல் 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் அப்போது காணப்பட்ட இரு அமைச்சுகளின் 27 செலவினத் தலைப்புகளின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா 106.6 மில்லியனான செலவினம் இந்த அமைச்சின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலுவை வருமானம் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமனம் ரூபா 430,720,831ஆக காணப்பட்டது. அவற்றுள் 2021 ஏப்ரல் 30ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாத வருமானம் ரூபா 180,888,093 ஆகும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 3 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக 2020ஆம் ஆண்டுக்குரியதாக ஒதுக்கப்பட்ட ரூபா 1,982,000 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 1,977,587 தொகை அதாவது 99 சதவீதம் எஞ்சியிருந்தது. மேலும், 2 மூலதன செலவின விடயங்களுக்காக 2020ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 658,000 தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 650,000 தொகை எஞ்சியிருந்ததுடன், அது செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் 98 சதவீதம் ஆகும். | நிதியேற்பாடு எஞ்சியிருந்தமைக்கு கொவிட் தொற்றுநோய் நிலமை பிரதான காரணமாக அமைந்திருந்தது. | நிதியேற்பாட்டினை உரிய வகையில் பயன்படுத்துவதன் மூலம், எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2103ஆம் இலக்க செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 250,000 போதுமானதாக இல்லாதிருந்தமையால், ரூபா 580,000 தொகை நி.பி.66 இன் கீழ் மாற்றல்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்வாறு மாற்றப்பட்ட நிதியேற்பாட்டின் 24 சதவீதம் எஞ்சியிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பெறுகையினை உரிய காலப்பகுதியில் நிறைவு செய்ய முடியாமையால் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | அத்தியாவசியமான நிதியேற்பாட்டினை மாத்திரம் மாற்றுவதற்கும், மாற்றப்பட்ட நிதியேற்பாட்டினை உரிய முறையில் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காரம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமான முறையில் மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும், அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டதன் பின்னர் உரிய அறிக்கையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். | 2018இன் 19ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) உள்ளக கணக்காய்வுப் பணியினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று உள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 5.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரைப் பெற்று உள்ளக கணக்காய்வுப் பிரிவினை தாபிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | - மேற்படி - |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 103(1) (ஆ) | வாகன விபத்துக்கள் இடம்பெற்றவுடன் அது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், PG 9518 ஆம் இலக்கமுடைய வாகனத்தின் விபத்து தொடர்பில் குறித்த விபத்து இடம்பெற்று 09 நாட்களின் பின்னரே உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சுப் பதவியணியின் புதிய ஊழியர் ஒருவர் என்பதால் விபத்து தொடர்பில் துரிதமாக (அத்திகதியில்) அலுவலகத்திற்கு அறிவித்திருக்கவில்லை. எனினும், எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க பொறுப்பாக செயற்படுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டு முதல் பேணுவதற்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிபிரமாணம் 110இன் ஏற்பாடுகளுக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிசேடு பேணப்பட வேண்டியமை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 115 (3) (அ) மற்றும் (ஆ) | அமைச்சினால் 2019 திசெம்பர் 23ஆந் திகதி கெப் வண்டியொன்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல் ஒன்றுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக அதாவது, அமைச்சிற்கு உரித்தற்ற காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கலுக்காக 2021 சனவரி 29ஆந் திகதி நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உரிய கொடுப்பனவு தாமதம் அமைச்சின் பொறுப்பல்ல என்பதுடன், சுற்றுலா அமைச்சின் அறிவித்தலுக்கமைய அந்த கொடுப்பனவின் தேவைப்பாடு கருத்திற்கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. | உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 214 | பொறுப்புகள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டு முதல் அனைத்து பொறுப்புகள், பொறுப்புகள் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 214இன் பிரகாரம், அனைத்து பொறுப்புகளும் இனங்காணப்பட்டு உரிய முறையில் பொறுப்புகள் பதிவேட்டினுள் உள்ளடக்கப்பட்டு அதனை நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2006 சனவரி 25ஆந் திகதிய 08ஆம் இலக்க தேசிய பெறுகைகள் முகவரகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ), (ஆ) மற்றும் (இ) | அமைச்சினால் ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக பெறுகைகள் திட்டமொன்று மற்றும் அதற்கடுத்த வருடத்திற்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை . | 2021ஆம் ஆண்டுக்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக பெறுகைகள் திட்டமொன்று மற்றும் அதற்கடுத்த வருடத்திற்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்திகள் மற்றும் 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 02/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04ஆம் பந்தி | | | |
| (இ) | 2018 திசெம்பர் 31ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை | சுற்றுலா அமைச்சினால் இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த 31 சொத்துக்களின் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அமைச்சினால் பயன்படுத்தப்படும் அனைத்து நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்கள் கொம்ப்டோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டின் போது சொத்துக்களை கணக்கு வைத்து, உரிய அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | நிதியல்லாத சொத்துக்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்கள் கொம்ப்டோலர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அமைச்சின் கீழ் 11 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்கள் 2017 திசெம்பர் 21ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02(ii) ஆம் பந்தியின் பிரகாரம் உரிய முறையில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறிய கடமைகள் எதிர்காலத்தில் முறைமைப்படுத்தப்படும் என்பதுடன், அதன் பிரகாரம் வாகனங்களையும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை உரிய முறையில் சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

3.2 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிககூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு – (i)) PG 9548 ஆம் இலக்க கெப் வண்டிக்கு 2020 செப்தம்பர் 16ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பில் சம்பவம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலமை காரணமாக ஆரம்ப அறிக்கை தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், முழுமையான அறிக்கையை பழுதுபார்த்தல் நிறைவடைந்ததும் உடனடியாக சமர்ப்பிப்பததற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், நட்டங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சினால் இந்த விபத்தினால் எற்பட்ட நட்டம் தொடர்பில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

4. நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஒக்தோபர் 06ஆந் திகதி 2017இன் 19ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(1) பிரிவின் பிரகாரம், அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அந்த அமைச்சின், திணைக்களத்தின விடயப்பரப்பிற்குரிய நிலையேறான அபிவிருத்தி மூலோபாயங்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் நிலையேறான அபிவிருத்தி மூலோபாய இலக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சிற்குரிய முதலீட்டு ஊக்குவிப்புச் சபையுடன் கலந்துரையாடி இனங்காணப்பட்ட ஏற்றுமதி வலயங்களுக்கு விசேடமான நிலையேறான அபிவிருத்தி மூலோபாயங்கள் இனங்காணப்பட்டவாறு உள்ளன. | அமைச்சினால் நிலையேறான அபிவிருத்தி மூலோபாய இலக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1)ஆம் பந்திக்கமைய அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த அமைச்சிற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதிற்கடமை அடிப்படையிலேனும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை துரிதமாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் மாதம் 09ஆந் திகதிய 2187/27ஆம் இலக்க அமைச்சரவைக்கு விடயப்பரப்பினை ஒப்படைக்கும் அதிவிசட வர்த்தமானிப் பத்திரத்தின் 25.1(01) ஆம் பிரிவின் பிரகாரம், அரச அமைச்சின் கீழ் சுவீகரிக்கப்பட்டுள்ள திணைக்களங்கள், அரசக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தர், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அமைச்சினால் நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் பங்குபற்றியிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டு முதல் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு பங்குபற்றச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை பங்குபற்றச்செய்து, இந்த நிறுவனங்களின் பணிப்பொறுப்பினை பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

6. மனிதவள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை உள்ளபடியான பதவியணியுடன் ஒப்பிடும் போது 22 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அமைச்சின் செயலாளரின் கீழான பிரதான பதவிகள் மூன்று கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 19ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. | தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு வெற்றிடமான பதவிகளுக்கு கால அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 2018 பெப்ரவரி 20ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் (02) II ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 03 இற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஒப்பந்தத சேவைகளுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் அரச நிர்வாக அமைச்சிற்கு அறிவித்து வாய்மொழிமூல இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவைகள் I ஆம் தரத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அழைக்கப்பட்டதுடன், அதற்குரிய அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றோம். | அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |